# தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் காரணமாக வெள்ளநீர் சூழ்ந்துள்ள பகுதிகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் ஆய்வு செய்தார்!



தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் காரணமாக வெள்ளநீர் சூழ்ந்துள்ள சூசைபாண்டியபுரம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட தொழில் மைய அலுவலகம், இந்திய உணவுக் கழகம், பி&டி காலனி, ராஜீவ்நகர் மற்றும் பக்கிள் ஓடை கடலில் கலக்கும் பகுதியான திரேஸ்புரம் ஆகிய பகுதிகளுக்கு நேற்று முன்தினம் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, விரைவாக வெள்ளநீரை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க அலுவலர்களுடன் நாடாளுமன்ற கழகக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார். உடன் அமைச்சர் பெருமக்கள் திருமிகு.கீதாஜீவன், அனிதா இராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் பலர் உடனிருந்தனர்.

